ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 11.4 – நிலையிடம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.4 – நிலையிடம்

‡ நிலை இடம் எங்கும் இன்றி நெடு வெள்ளம் உம்பர் ⋆
வள நாடு மூட இமையோர் ⋆
தலை இட மற்றெமக்கோர் சரண் இல்லை என்ன ⋆
அரண் ஆவன் என்னும் அருளால் ⋆
அலை கடல் நீர் குழம்ப அகடாட ஓடி ⋆
அகல் வான் உரிஞ்ச ⋆
முதுகில் மலைகளை மீது கொண்டு வரு மீனை மாலை ⋆
மறவாதிறைஞ்சென் மனனே ! ॥ **11.4.1** ॥

செரு மிகு வாள் எயிற்ற அரவொன்று சுற்றித் ⋆
திசை மண்ணும் விண்ணும் உடனே ⋆
வெருவர வெள்ளை வெள்ளம் முழுதும் குழம்ப ⋆
இமையோர்கள் நின்று கடைய ⋆
பரு வரை ஒன்று நின்று முதுகில் பரந்து ⋆
சுழலக் கிடந்து துயிலும் ⋆
அருவரை அன்ன தன்மை அடல் ஆமை ஆன ⋆
திருமால் நமக்கோர் அரணே ॥ **11.4.2** ॥

தீதறு திங்கள் பொங்கு சுடர் உம்பர் உம்பர் ⋆
உலகேழினோடும் உடனே ⋆
மாதிர மண் சுமந்த வட குன்றும் நின்ற ⋆
மலை ஆறும் ஏழு கடலும் ⋆
பாதமர் சூழ் குளம்பின் அக மண்டலத்தின் ⋆

ஒரு பால் ஒடுங்க வளர் சேர் ⋆
ஆதி முன் ஏனம் ஆகி அரணாய மூர்த்தி அது ⋆
நம்மை ஆளும் அரசே ॥ **11.4.3** ॥

தளை அவிழ் கோதை மாலை இரு பால் தயங்க ⋆
எரி கான்றிரண்டு தறு கண் ⋆
அளவெழ வெம்மை மிக்க அரி ஆகி ⋆
அன்று பரியோன் சினங்கள் அவிழ ⋆
வளை உகிர் ஆளி மொய்ம்பில் மறவோனதாகம் ⋆
மதியாது சென்றொருகிரால் ⋆
பிளவெழ விட்ட குட்டம் அது வைய மூடு ⋆
பெரு நீரின் மும்மை பெரிதே ॥ **11.4.4** ॥

வெந்திறல் வாணன் வேள்வி இடம் எய்தி ⋆
அங்கோர் குறள் ஆகி மெய்ம்மை உணர ⋆
செந் தொழில் வேத நாவின் முனி ஆகி ⋆
வையம் அடி மூன்றிரந்து பெறினும் ⋆
மந்தர மீது போகி மதி நின்றிறைஞ்ச ⋆
மலரோன் வணங்க வளர் சேர் ⋆
அந்தரம் ஏழினூடு செல உய்த்த பாதம் அது ⋆
நம்மை ஆளும் அரசே ॥ **11.4.5** ॥

இரு நில மன்னர் தம்மை இரு நாலும் எட்டும் ⋆
ஒரு நாலும் ஒன்றும் உடனே ⋆
செரு நுதலூடு போகி அவர் ஆவி மங்க ⋆
மழுவாளில் வென்ற திறலோன் ⋆
பெரு நில மங்கை மன்னர் மலர் மங்கை நாதர் ⋆
புலமங்கை கேள்வர் புகழ் சேர் ⋆

பெரு நிலம் உண்டுமிழ்ந்த பெரு வாயர் ஆகி ⋆
அவர் நம்மை ஆள்வர் பெரிதே ॥ **11.4.6** ॥

இலை மலி பள்ளி எய்தி இது மாயம் என்ன ⋆
இனமாய மான் பின் எழில் சேர் ⋆
அலை மலி வேற்கணாளை அகல்விப்பதற்கு ⋆
ஓர் உருவாய மானை அமையா ⋆
கொலை மலி எய்துவித்த கொடியோன் இலங்கை ⋆
பொடி ஆக வென்றி அமருள் ⋆
சிலை மலி செஞ்சரங்கள் செல உய்த்த நங்கள் ⋆
திருமால் நமக்கோர் அரணே ॥ **11.4.7** ॥

முன் உலகங்கள் ஏழும் இருள் மண்டி உண்ண ⋆
முதலோடு வீடும் அறியாது ⋆
என்னிது வந்ததென்ன இமையோர் திசைப்ப ⋆
எழில் வேதம் இன்றி மறைய ⋆
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி ⋆
இருள் தீர்ந்திவ்வையம் மகிழ ⋆
அன்னமதாய் இருந்தங்கறநூல் உரைத்த ⋆
அது நம்மை ஆளும் அரசே ॥ **11.4.8** ॥

துணை நிலை மற்றெமக்கோர் உளதென்றிராது ⋆
தொழுமிங்கள் தொண்டர் ! தொலைய ⋆
உண முலை முன் கொடுத்த உரவோளதாவி ⋆
உக உண்டு வெண்ணெய் மருவி ⋆
பணை முலை ஆயர் மாதர் உரலோடு கட்ட ⋆
அதனோடும் ஓடி அடல் சேர் ⋆

இணை மருதிற்று வீழ நடை கற்ற தெற்றல் ⋆
வினைப் பற்றறுக்கும் விதியே ॥ **11.4.9** ॥

‡ கொலை கெழு செம்முகத்த களிறொன்று கொன்று ⋆
கொடியோன் இலங்கை பொடியா ⋆
சிலை கெழு செஞ்சரங்கள் செல உய்த்த நங்கள் ⋆
திருமாலை வேலை புடை சூழ் ⋆
கலி கெழு மாட வீதி வயல் மங்கை மன்னு ⋆
கலிகன்றி சொன்ன பனுவல் ⋆
ஒலி கெழு பாடல் பாடி உழல்கின்ற தொண்டர் அவர் ⋆
ஆள்வர் உம்பர் உலகே ॥ **11.4.10** ॥

அடிவரவு — நிலை செருமிகு தீதறு தாளை வெந்திறல் இருநிலம் இலைமலி முன் துணை கொலை மான்

நிலையிடம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்